விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —
மலர் 25 தை 17 ரபி. ஆகி 27 இதழ் 349
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 31-1-84

சர்வகட்சி மகாநாடு:

## "உடனடிப் பலனை எதிர்பார்க்க முடியாது!"

### இந்திய வெளியுறவு அமைச்சர் கருத்து

(சென்னை)

"இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண சர்வகட்சி மாநாடு உதவும்" என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் நேற்று இத்தகவலைத்தெரிவித்த அமைச்சர் நரசிம்மராவ்; நல்லெண்ணத்துடனும், ஒற்றுமையுடனும் முயன்றால் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும் என்றும் கூறினர்.

'சிக்கலான பிரச்னை என்பதால் உடனடியாகப் பலன்களை எதிர்பார்க்கமுடியாது.

(8-ம் பக்கம் பார்க்க)

# நான் ஹிட்லர், இடி அமின் இல்லை

# தீவிரப்போக்கும் கிடையாது!

## சிறுபான்மை சமுதாயத்தை மனிதராக மதிக்கவேண்டும்'

### ஜனதிபதி ஜயவர்த்தன பேருரை

(நமது சிறப்பு நிருபர்)

''நான் ஹிட்லரும் இல்லை இடிஅமினும் இல்லை. இவர்கள் போல சர்வாதிகாரிகளாக மாறத்தயாராகவும் இல்லை. மக்களின் அன்பு, கருணை ஆகியவற்றைப் புரிந்துகொண்டு செயல்படவே நான் விரும்புகிறேன்'' என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகம் வழங்கும் திட்டத்தின் நான்காவது வருட நிறைவுவிழா பத்தேகம மைதானத்தில் நேற்றுப்பகல் நடைபெற்றபோது இதில் கலந்துகொண்டு பேசுகையில் ஜனதிபதி மேற்படி தெரிவித்தார்.

ஜனதிபதி மேலும் கூறியதாவது:

"ஹிட்லர், இடிஅமின்போன்ற கொடுமைக்காரர்களாக நான் மாற விரும்பவில்லை. பெரும்பான்மை இனமக்கள், சிறுபான்மையினரையும் மக்களாக மதித்துக் கொள்ளவேண்டும். பயங்கரவாதம் என்பது இரகசிய முறையில் செயல்படுவதினால் அதனை மக்களின் ஆதரவின்றி அடக்கமுடியாது. தீவிரமான சட்டங்கள் மூலமும் கட்டுப்படுத்த முடியாது. கருணை புரிந்துகொள்ளும் மனப்பான்மை என்பவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை, பரஸ்பர உறவுகள் மூலம் தான் இப்பிரச்னையைத் தீர்க்கமுடியும்.

''மகாசங்கத்தினர் வடக்கு, இழக்கு மாகாண மக்களுக்கு உண்மைநிலைகளை தெரிவிக்க வேண்டும். அவர்களுடன் அன்பு கருணை அடிப்படையில் தமதுகருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

'தோட்டப்பகுதிமக்களும், வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை மக்களும் தமிழீழத்தை வெறுக்கின்றனர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

அளவெட்டி கொள்ளை:

## ரூ. 75,000 நகைகள் மீட்பு

(மாவிட்டபுரம்)

அளவெட்டியைச் சேர்ந்த எஸ். நடராஜா என்பவரிடமிருந்து ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்ட 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளில் ரூபாய் 75,000 பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நகைகளை காங்கேசன் துறைப் பொலிசார் யாழ்ப்

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் காணப்பட்ட

## சிங்கள சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் முதல் தடவையாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தனிச்சிங்கள சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது யாழ். நவீன சந்தை சுவரில் காணப்பட்ட இச்சுவரொட்டியை நேற்று பலர் பார்வையிட்டனர்,

அந்தப் பிரமாண்டமான சுவரொட்டியில்; ''நாங்கள

(8-ம். பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர் விபரம்:

### மாணவர் ஒன்றியம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இரண்டு வாரகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டபோது எந்தவித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறுமல் அமைதியான சூழ்நிலையில் வகுப்புகள் ஆரம்பமாகின.

இதற்கிடையே இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தூதுக்குழு ஜனதிபதியைச்சந்தித்த பின்னர் ஜனதிபதியால்நியமிக்கப்பட்ட குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் முகமாக விபரச் சேகரிப்பில் ஒன்றியம் இறங்கியுள்ளது.

''பாதிக்கப்பட்ட அனைத்து தமிழ் மாணவர்கட்கும் அவரவர் விருப்பத்தின் பேரில் வடக்கு, இழக்கு பல்கலைக்கழகங்களில் இடவசதி செய்வதற்கு ஜனதிபதி இணங்கம் தெரிவித்துள்ளார். ஆகவே இடம்பெயர்ந்த தமிழ் மாணவர்கள் விபரம் சேகரிக்கும் ஒன்றியப்பிரதிநிதிகளிடம் அல்லது யாழ் பல்கலைக்கழகத்திலுள்ள ஒன்றிய அலுவலகத்துடன் உடனடி

(8-ம் பக்கம் பார்க்க)

பொலிஸ் கான்ஸ்டபிள் பலி:

## 6 இராணுவ வீரருக்கும் விளக்கமறியல்

(திருகோணமலை)

திருகோணமலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான பொலிஸ்கான்ஸ்டபிள் தர்மதாச செனிவரத்ன கொலை தொடர்பாக சந்தேகநபர்களான ஆறு இராணுவத்தினரும் திருகோணமலை பொலிஸ் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது ஆறு நபர்களையும் அடுத்த மாதம் பதின்மூன்றும் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் எம். கே. செல்வராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 25ம் திகதி இரவு திருகோணமலை பிடரிக் கோட்டைப் பகுதியில் பொலிஸார் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோது இராணுவத்தினர் வழிமறித்து துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்றும், இதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானர் என்றும் குற்றப்சாட்டி வழக்கு தாக்கல்செய்யப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை திருகோணமலை பொலிஸ் நீதிமன்ற நீதவான் திரு எம். கே. செல்வராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சந்தேகநபர்களான ஆறு இராணுவ வீரர்களும் முதற்தடவையாக ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை, அனுராதபுரம் விளக்கமறியல் சிறையில் வைக்குமாறு எதிரிகள் தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி கோரியதைத் தொடர்ந்து அவர்களை அநுராதபுரம் சிறையில், விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்ததரவிட்டார்.

### 7 மணிவரை பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியபோக்குவரத்து சபையின் பஸ் சேவை, இன்று முதல் இரவு ஏழுமணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மாலை பஸ் சேவை நேற்று இரவு6-30 மணி வரை மட்டுமே நடைபெற்று வந்தபோதிலும், வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு, எஸ். கனகரத்தினம். போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்டு வலியுறுத்தியதைத் தொடர்ந்து இரவுச் சேவை ஏழு மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது

இரவுச் சேவை சிறிது காலத்துக்கு இரவு ஏழு மணிவரை மட்டுமே நடைபெறும் என்று நம்பப்படுகிறது.

## லொறி விபத்தில் கான்ஸ்டபிள் பலி!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் நேற்று முன்தினமிரவு நிகழ்ந்த லொறி விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள், ஆரியசிங்க (40 வயது) பலியானர்! இவர் கண்டியைச் சேர்ந்தவர்.

இவர் விசேட கடமைக்காக பதுளையிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்திருந்தார்.

லொறியை தடுத்து நிறுத்த முயன்றபோது லொறி அவரை மோதிச் சென்றதாகக் கூறப்பட்டது

வாழைச்சேனை கடுதாசி கூட்டுத்தாபனத்திற்குரிய லொறியொன்று களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டக்களப்பிற்குச்சென்று கொண்டிருந்தபோது இவ்விபத்து நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொறிச்சாரதி கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Honda C. G. 125 Deluxe, 84 ஸ்ரீ இலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. க. சுகிர்தரன் 200, பிரதான வீதி, (St Joh'ns கல்லூரிக்கு முன்னால்) சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 482

75 சி. சி (வெஸ்பா மொடல்) லம்ப்ரெட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. 113, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 438

1 பரப்பு 14 குளிகள் வீடு கட்டுவதற்கு சதுரமான காணி சுற்றுவர மதில், கஸ்தூரியார், நாவலர் ரோட்டுகளுக்கு அண்மையில், கில்னர் ஒழுங்கையில், 466/4, மூத்ததம்பி அவன்யு, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 497

வல்வெட்டித்துறை திருவில் வயலுக்கு அருகாமையில் நான்குபரப்புகாணி விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் சந்திக்கவும். க. தில்லையம்பலம் (மாணல்) சித்தவை லேன், வல்வெட்டித்துறை. 374

சுன்னாகம் ஈஸ்வரி இரும்புக் கடையில் கட்டிடத்துக்குத் தேவையான இரும்புச்சாமான்கள், பெயின்ற் வகைகளுடன் குடும்பத்தலைவிகளுக்கு தேவையான ஆட்டுக்கல், அம்மி, திருகை, கோவில் தளவரிசைக்கல் அனைத்தும் விற்பனைக்குண்டு. வவனியா, சூரியா ஸ்ரோர்ஸின் கைதேர்ந்த தொழில் நுட்பக்கலைஞர்களால் கடைந்து தயாரிக்கப்படுகிறது. 143

10 ஏக்கர் வீதம் 30 ஏக்கர் நெல்வயல் ஒரே இடத்தில் தொடர்பாக விற்பனைக்குஇருக்கின்றது. காலபோகம் நீர்ப்பாய்ச்சல் வசதியுண்டு. ஏக்கர் 16ஆயிரம் ரூபாவுக்கு மேல் கூடிய கேள்விக்குரிய விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மாசி 15ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: கி. வ. ஐயாத்துரை பசுமலைக்கமம், கல்வெட்டித்திடல், புளியம்பொக்கணை. 417

Hyline ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் மார்ச்மாதம் முதல் கிழமை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள உடனே பதிவுசெய்து கொள்ளுங்கள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் பதிவுசெய்யலாம். சுபாலேந்திரா 586 கண்டி ரோட் நெடுங்குளம் சந்தி அரியாலை, யாழ்ப்பாணம். 450

ஜப்பானிலிருந்து மறுசீரமைக்கப்பட்டு இறக்குமதிசெய்யப்பட்ட ரோசா 6 சிலிண்டர் மினியஸ் எஞ்ஜின் கியர்வொக்சுடன் விற்பனைக்குண்டு. அத்துடன் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் C 70-C 90, CD 125, CX 500 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ஆர். கே. அன்சன்ஸ், 129, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். T. P. No. 24029. 473

முத்தையன்கட்டில் நல்ல வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் "விஜி ஸ்ரோர்ஸ்" (மொத்த சில்லறை வியாபாரத்திற்கும், மிளகாய், நெல், உழுந்து வெண்காயம் கொள்முதல் செய்வதற்கும்) ஏற்ற நல்ல கட்டிடம்கொண்ட கடையும் மூன்று ஏக்கர் தென்னம் தோட்டமும் விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரத்திற்கு பொ. விஜயரத்தினம், I. S. T. I. கிளிநொச்சி. 470

## விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் எல்லாவித வியாபாரத்திற்கும் ஏற்ற இடம். கார், லொறி நிறுத்துவதற்கு போதிய இடவசதியுடன் கூடிய கடை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். ராஜாதியேட்டர், யாழ்ப்பாணம். 481

## தேவை

ஸ்ரூடியோ வேலைகளில் நல்ல அனுபவமுள்ளவர் தேவை அனுபவ சான்றிதழ்களுடன் 10-2-84க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். ஸ்ரீரங்கநாதன் நாககிரி, வில்சன் ரோட், கிளிநொச்சி. 460

யாழ்ப்பாணத்தில் பஸ்தரிப்பு நிலையத்திற்கருகாமையில் உள்ள பிரபல வியாபார ஸ்தாபனம் ஒன்றில் விற்பனையாளராக கடமைபுரிய விரும்புவோர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 459 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 459

கற்பூரம் பொதி செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாக நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். கூடிய அனுபவம் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும். பெண்பிள்ளைகள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 458, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 458

சுசாரகர் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும், 25 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் 5-2-1984க்கு முன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 498, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 498

சிங்கப்பூரில் இருக்கும் குடும்பத்திற்கு பணிப்பெண்ணாக கடமையாற்ற 30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவர் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும்: திருமதி எட்னா பாலச்சந்திரன், காலிங்கன் தியேட்டர் முன்பாக, இணுவில். 495

வவுனியாவின் பிரபல்யமான அரிசி ஆலைக்கு, அரிசி, நெல் வியாபாரத்துக்கு அனுபவம் உள்ளவர்களும், வாச்சர்மாரும் தேவை உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். கி. மகேஸ்வரன், சித்தி அரிசி ஆலை, கண்டி ரோட், வவுனியா. T. P. 0242301. (488)

யாழ்ப்பாணம், புத்தூர், நெல்லியடி ஆகிய இடங்களில் சனி, ஞாயிறு நாட்களில் 50 மாணவர்களுக்கு சேவை நோக்குடன் சுருக்கெழுத்து போதிப்பதற்கு தளபாடங்களுடன் கூடிய இடவசதி தரக்கூடிய சமூக சேவை நிறுவனங்கள் கடித மூலம் 10-2-84 திகு முன்னர் தொடர்பு கொள்க. விளம்பர இல: 483 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 483

## WANTED

Government Chief Accountant with 34 years audit, accounting and administrative experience in commercialised departments due to retire shortly at 52 seeks suitable appointment in Jaffna Apply Advt. No 500, Eelanadu Ltd., Jaffna. (500)

## சேவை

எமது ஸ்ரூடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம் 502

## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள 'அங்கத்துவ உறவு பயிற்சி உத்தியோகத்தர்' பதவிக்கு யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா 2/- செலுத்திப்பெற்று 15-02-84 ந் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

குறியீட்டு இலக்கம்:- 201/11
சம்பளத்திட்டம்:-300-540
15X12-20X3

கல்வித்தகைமை:- கூட்டுறவுப் பணியாளர் 12வது சம்பளத் திட்டப் பதவியில்
(255-460)
..................
12.50X8-15X7

இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது; கூட்டுறவுப்பணியாளர் உயர் தரப்பத்திரம்
க. பொ. த. (உ. தரம்)
3 பாடம் சித்தி
வயது:- 22—35 வருடங்கள் (சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.
27-01-84. [496]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்

வேலணை, 9ம் வட்டாரம் வேலணை வடக்கைச் சேர்ந்த சிசுவலிங்கம் கந்தசாமியின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் சம்பந்தமாக மரணச்சொத்து நிர்வாகப்பத்திரம் பெறும் விண்ணப்ப விடயத்தில்

காலஞ்சென்றவர்

வழ. இல: கி/87
கந்தசாமி கைம்பெண் இரத்தினம்மா, 9ம் வட்டாரம், வேலணைவடக்கு, வேலணை.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு மார்கழி மாதம் 3ம் திகதி.

நடராசா,
பதிவாளர்,
ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்.

வரைதல்:
(ஒப்பம்)
செ. மகேசன்,
மனுதாரரின் சட்டத்தரணி. 401

பருத்தித்துறையில்
**Chartered Preliminary**
ஆரம்பம்: 05 - 02 - 84
தொடர்பு கொள்ளும் விலாசம்:
**வடநிதி லிமிடெற்,**
(C. T. B டிப்போவுக்கு எதிரில்)
பிரதான வீதி, பருத்தித்துறை. 485

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

எங்கள் குல விளக்காகத் திகழ்ந்த நாகமணி சுப்பிரமணியம் அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், துன்பத்தில் பங்கு கொண்டவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் 2-2-84 வியாழக்கிழமை கிரிமலையில் நடைபெறும் அந்தியேட்டியிலும் அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் இருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி இராசம்மாவும்
மகன் திருச்செல்வமும்
மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளும்.

வராத்துப்பளை, பருத்தித்துறை.
486

## அரிய சந்தர்ப்பம்

### தொழில் வாய்ப்பு பயிற்சிகள்

* டிப்ளோமா இன் ஹோட்டல் மனேஜ்மென்ற்
(DIPLOMA IN HOTEL MANAGEMENT)
பயிற்சிக் காலம் – 3 மாதம்
செய்முறை பயிற்சியும் அளிக்கப்படும்
* றேடியோ - டெலிவிஷன் பயிற்சி
பயிற்சிக் காலம் – 3 மாதம்
சிறந்த செய்முறைப் பயிற்சியுடன்
* ஏயார் கொண்டிசனிங் பயிற்சி
(AIR CONDITIONING)
பயிற்சிக் காலம் – 3 மாதம்
சிறந்த செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்

ஒவ்வொரு மாணவருக்கும் இலவசமாக
ஆங்கிலம் கற்பிக்கப்படும்

**05-02-84 க்கு முன்பாக**
விண்ணப்பப் படிவத்தினை பெற்று விண்ணப்பிக்கவும்.

**நாஷனல் அக்கடமி**
(விவேகானந்த அச்சகம் முன்பாக)
11, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி—யாழ்ப்பாணம்.
(489)

**வெளிநாடு செல்கிறீர்களா?**
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை
எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே
பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
**த றூன்ஸ் கம்பனி லிமிட்டெட்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680

பிரயாணச்சீட்டுக்களை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# "சவூதிக்கான மே. ஜெர்மனியின் ஆயுதவிற்பனை பரிசீலனை செய்யப்படும்"

## இஸ்ரேல் தலைவர்களுக்கு ஹெல்மட்கோல் உறுதி!

ரெல்அவிவ், ஜன. 30
சவூதிஅரேபியாவுக்கு நவீன ரக போர் ஆயுதங்களை விநியோகிப்பது தொடர்பான தனது திட்டத்தை மேற்கு ஜெர்மனி மறுபரிசீலனை செய்யவுள்ளது

மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்மட்கோல் தமது ஆறு நாள் இஸ்ரேலியப்பயணத்தின் முடிவில் இஸ்ரேலியத் தலைவர்களுக்கு இந்த உறுதிமொழியை அளித்தார்.

இந்த ஆறுநாட்களிலும் அவர் கலந்து கொண்ட சகல பேச்சுக்களின்போதும் சவூதி அரேபியாவுக்கான ஆயுதவிற்பனை பற்றியே இஸ்ரேலியத் தலைவர்கள் வலியுறுத்தினர் இதன். பின்னர் ஹெல்மட்கோல் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

தமது பயணத்தின் முடிவில் பேசியஹெல்மட்கோல்; 'ஹிட்லர் 60 லட்சம் யூதர்களை கொன்ருர் அந்த ஜெர்மனியின் சார்பாக நான்இங்குவரவில்லை. யூத இனத்துடனும் இஸ்ரேலுடனும் சமமான நட்புறவினை பேணும் புதிய ஜெர்மனியின் பிரதிநிதியாகவே வந்திருக்கின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

மேற்கு ஜெர்மனி யூத இனத்தையும், இஸ்ரேலிய அரசையும் தொடர்ந்து பாதுகாத்து வருமென்றும் அவர் உறுதியளித்தார். (சு)

## இலவச பாடப்புத்தகம் விநியோகம் ஆரம்பம்

(புலோலி)
அரசாங்கத்தின் இலவச பாடப்புத்தக விநியோகத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு இவ்வாண்டிற்கான இலவச பாட புத்தகங்கள் வழங்கும் வைபவம் புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. வி. எஸ் ஏகாம்பரநாதன் தலைமையில் இன்று நடைபெறுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு. எம். பி வீரவாகு இலவச புத்தக விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார் என்றும் இதனைத் தொடர்ந்து 6-ம் திகதி வரை கல்விச்சேவைகள் அமைச்சின் பணிப்பின்படி பாடசாலை வாரம் கொண்டாடப்படுமென்றும் அதிபர் திரு. ஏகாம்பரநாதன் தெரிவித்தார்.

பாடசாலைவாரத்தின் போது மாணவர்கள் மத்தியில் பாடசாலை அபிவிருத்தி பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தல் சிரமதான நடவடிக்கைகள் நூல்நிலையத்தை ஒழுங்குபடுத்துதல் போன்றநடவடிக்

(7-ம் பக்கம் பார்க்க)

## அரச சொத்துக்கு சேதம் விளைவித்தால் கடும் தண்டனை!

### இந்தியாவில் அவசரசட்டம்

புதுடில்லி, ஜன. 30
இந்தியாவில் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போருக்கான தண்டனை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போருக்கு முன்னர் 6 மாதம் முதல் 5 வருடங்கள்வரை தண்டனை வழங்கப்பட்டது. இப்போது 10 வருடங்களாக இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அவசரச் சட்டம் அண்மையில் இந்தில ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்டது.

பஞ்சாப்பிலும், ஏனைய சில மாநிலங்களிலும் அதிகரித்திருக்கும்வன்முறைகள் காரணமாக புதிய சரத்துக்கள் நேற்று இந்திய தண்டனை ஒழிப்புச் சட்டத்துடன் சேர்க்கப்பட்டன.

இதற்கிடையே பஞ்சாப்நிலை குறித்து ஆராய மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட கமிட்டி பஞ்சாப்பில் தீவிரவாதிகளின் செயல்களை முறியடிக்க அரசின் செயற்பாடு போதாதென்றும் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறது. (சு)

## பழனி ஆண்டவர் அபிஷேகங்கள் இடை நிறுத்தம்!

சென்னை, ஜன. 30
பழனிமலை மூலஸ்தான தண்டாயுதபாணி விக்கிரகத்தில் தேய்மானம் ஏற்பட்டுள்ளது. இதனால் இவ்விக்கிரகம் மீது நடத்தப்படும் அபிஷேகங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பூஜைகள் மட்டுமே மீண்டும் அபிஷேகம் ஆரம்பிக்கப்படும்வரை நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

பழனிமலைமூலஸ்தான தண்டாயுதபாணி ஆண்டவர் விக்கிரகம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. நவபாஷாணங்கள் கொண்டு உருவாக்கப்பட்டது இவ்விக்கிரகத்துக்கு அதன் ஸ்தாபன காலம் தொட்டு இன்றுவரை இடைவிடாது அபிஷேகங்கள்செய்யப்படுவது வழக்கமாகும். இதனாலேயே இதன் உருவத்தில் தேய்மானம் ஏற்பட்டிருக்கிறது

தமிழகஅறநிலையத்துறை அமைச்சு இது குறித்து உடன் செயலில்இறங்கியுள்ளது. இதன் சிபார்சின் அடிப்படையிலேயே அவ்விக்கிரகத்திற்கான அபிஷேகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையின்கீழ் விசேட நிபுணர்கள் குழுவொன்றும் பழனி ஆண்டவர் தேய்மானத்தை நிவர்த்திசெய்ய நியமிக்கப்பட்டுள்ளது. (கி)

## அப்கானிஸ்தான் பிரஜைகளினால் பாகிஸ்தானுக்கு தலையிடி!

இஸ்லாமபாத், ஜன. 30
அப்கானிஸ்தானிலிருந்து அகதிகள் என்ற போர்வையில் பாகிஸ்தான் பிரதேசத்தினுள் நுழைந்திருக்கும் லட்சக் கணக்கான அப்கான் பிரஜைகளினால் இப்போது பாகிஸ்தானில் பிரச்சினை எழுந்தது.

அப்கானிஸ்தானை அண்டிய பாகிஸ்தான் எல்லையில் சுமார் 30 லட்சம் அப்கான்பிரஜைகள் தங்கியிருக்கின்றனராம். இவர்கள் விவகாரத்தில் ஜனாதிபதி ஸியாவூல்ஹக் ஆதரவாகவே இருக்கிருர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரம் குறித்து பாகிஸ்தானில் ஜனநாயக மீட்புக்காக போராடும் இருஎதிர்க்கட்சித் தலைவர்கள்; ''பாகிஸ்தானில் தங்கியிருக்கும் அப்கான் பிரஜைகள் பாகிஸ்தானியர் போலவே நடந்துகொள்கின்றுர்கள். அவர்கள் பாகிஸ்தானில் மத்திய பகுதிகளில் குடியேறியிருப்பதுடன், பயிர் செய்கை, மந்தைமேய்ப்பு போன்ற தொழில்களிலும் ஈடுபட்டுவருகின்றுர்கள். அத்துடன் பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் இவர்கள் திரண்டு வந்து பாகிஸ்தானியருடன் போட்டிபோட்டு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றுர்கள். இதனால் பாகிஸ்தானியர் பலத்த பாதிப்புக்குள்ளாக வேண்டியேற்பட்டுள்ளது. உள்நாட்டில் பல நெருக்கடிகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ஸியாவூல்ஹக் அப்கான் பிரச்சினையை முன்வைத்தே தமது ஆட்சியை காப்பாற்றி வருகின்றுர். அதனால் அவர் அப்கான் பிரஜைகளுக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்.'' என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

### இதுவரை 27 ஆயிரம் பேர்பரிசோதனை:

# 1100 பேருக்கு புற்று நோய்!

(மாவிட்டபுரம்)
காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாய் புற்றுநோய் தொடர்பான ஆய்வின் பயனாக இதுவரை சுமார் 1100 பேருக்கு வாய் புற்றுநோய் அறிகுறி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனமும், சுகாதாரப் பகுதியினரும் இணைந்து காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்த வாய் புற்றுநோய் ஆய்வை மேற்கொண்டுள்ளனர்,

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ. தெய்வேந்திரனின் மேற்பார்வையில் இப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்களும், மருத்துவமாதர்களும் வீடு வீடாகச் சென்று இந்த ஆய்வை மேற்கொண்டு வந்தனர்.

இதுவரை 27 ஆயிரம் பேர் வரை இந்தப் பரிசோதனைக்குட்பட்டதாகவும், அதில் 1100 பேருக்கு வாய் புற்று நோயின் ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்டதாகவும், அவ்வாறானவர்களைத் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய நிபுணர் மூலம் பரிசோதித்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கிய போதும் 500 பேர் மட்டுமே இவ்வாறு பரிசோதித்துக் கொண்டதாகவும், ஏனையோர் கவலையீனமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மயிலிட்டிக்கரைப் பகுதியில் கூடுதலாகவும், அடுத்து அளவெட்டிப் பகுதியிலும் மேற்படி வாய்ப்புற்று நோயின் அறிகுறியுள்ளவர்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்கு வெற்றிலை புகைத்தல் ஆகியன காரணமாகவே பெரும்பாலும் வாய் புற்று நோய் ஏற்படுவதாகவும் இதன் ஆரம்ப அறிகுறி தென்பட்டவுடன் சிகிச்சை மேற்கொண்டால் நோயைக் குணப்படுத்திவிடலாமெனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

கவலையீனமாக இருந்தால் நோய் வளர்ந்து உயிருக்கே ஆபத்தாகிவிடுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## தன்ஸானியா துணைஅதிபர் பதவி விலகினர்!

(லண்டன்)
தன்ஸானியாவின் துணை அதிபர், பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இவரது ராஜினாமாவை தன்ஸானியாவின் ஆளும்கட்சி ஏற்றுள்ளது.

அரசியல்நிர்ப்பந்தம் காரணமாக இவர் பதவி விலகியிருக்கலாமென்று நம்பப்படுகிறது. (சு)

## வெள்ள நிவாரணம்

மன்னார்
மன்னார்மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 3,620குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது. அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கும் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 400 குடும்பங்களுக்கும் மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 220 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

## பண்டத்தரிப்பில் 'டிங்கி' ஜுரம்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்புப் பகுதியில் 'டிங்கி'க் காய்ச்சல் ஒன்றுவேகமாகப் பரவிவருகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள பனியும் வெய்யிலுமான காலநிலையே இதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுகிறது. காய்ச்சல், மூட்டுக்களில் பலத்த வலி, தலையிடி என்பனஇந்த நோயின் அறிகுறியாகும். பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் தினமும் தற்போது சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

★ திருமணம் ★ பிறந்தநாள் மற்றும் இன்னோரன்ன
மங்கள வைபவங்களை

சிறந்த முறையில்
எழில்மிகு வண்ணக் கலரில்
வீடியோ படப்பிடிப்பு
செய்துகொள்ள

சித்திராலயா

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22522

### மணிவாக்கு

பாவம் என்னும் கொடியவனுக்குப் பல ஆயுதங்கள் இருந்தாலும் அந்த ஆயுதங்களுக்கெல்லாம் ஒரு பிடி உண்டு. அதன் பெயர்தான் பொய்.

—ஹோம்ஸ்

# நமது நோக்கு

## கலாநிதி கல்பகேயின் நொண்டிச் சாட்டுகள்?

இலங்கைப் பல்கலைக்கழகம் உருவான கதை அதன் முதல் உபவேந்தரான பேராசிரியர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களின் பேராற்றலை விளக்கும் கதையெனலாம்.

சர்வதேச புகழ்பெற்ற சேர். ஐவர். பேரறிஞர். ஆராய்ச்சிமேதை மட்டுமல்ல அரசியல் ஞானியும், பல்கலைக்கழக நிர்வாகத் திறமைவாய்ந்த பெரியாருமாவர்

குறிப்பிட்ட காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி இலங்கைப்பல்கலைக்கழகமாகமாறவேண்டுமென்ற தீர்மானம் எடுத்ததும் கொழும்பில் இருந்த அக்கல்லூரியே இலங்கைப் பல்கலைக்கழகமான துரித மாற்றம் அவர் போன்ற ஆங்கிலத் திறமைசாலிக்கே முடியுமென்று அக்காலத்தில் பேசப்பட்டது.

கொழும்பிலிருந்து கொண்டே பேராதனையில் புதிதாக அமைக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் கட்டுப்பட்டது; பேராசிரியரின் அசாதாரணவிவேகத்தாலும் ஆளுமையாலுமே இப்பெரும் முயற்சி வெற்றி கண்டதென்றால் அது மிகையாகாது

சேர் ஐவர் திட்டமிட்ட பல்கலைக்கழகம், இங்கிலாந்தின் புராதன ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகங்களின் அடிப்படையில் அமைந்தது அது குறிப்பிட்ட வசதிபடைத்த சமுதாயத்தின் மேல்மட்ட மாணவர்களுக்கே இடமளிக்கும் நோக்கம் கொண்டது.

ஆரம்பத்தில், பேராதனையில் இன்று வீற்றிருக்கும் பல்கலைக்கழகம் வெளிவாரி மாணவர்களுக்குஇடமளிக்கவில்லை. பல்கலைக்கழகம் என்றால்வெறும்படிப்பும்பட்டமுமல்ல; பண்பாட்டை வளர்க்கும் ஒரு அதிஉன்னத நாகரிக கலைக்கோயிலெனக் கொள்ளப்பட்டது.

வசதியற்ற திறமையுடைய மாணவர்கள் புலமைப்பரிசில் மூலமே பல்கலைக்கழகம்வரமுடியுமென்று வாதாடினார் பேராசிரியர் ஜென்னிங்ஸ்: எவரும் மூச்சுக்காட்டமுடியாத சுயநிர்ணயம் அவருக்கு இருந்தது.

ஆயிரக்கணக்கான தகைமையுடைய மாணவர்கள் உயர்கல்விப் பட்டினியால் வாடுகின்றனர் என்ற குரல் எழுப்பப்பட்டது உண்மை.

அதற்கு மிகக் காரசாரமான விடையளித்துஅவர் தம்முடைய அதிகாரத்தைத் தகுந்த நியாயங்களுடன் தொடர முடிந்தது. ஆட்சியாளர் பல்கலைக்கழக நிர்வாகத்தில் எவ்வகையிலும் தலையிட முடியாதவாறு தமது வல்லமையால் வெருட்டி வைத்தாரென்று சொல்லலாம்.

பேராதனையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதிய இடமுண்டு;ஆனால் இடத்துக்கேற்ற மாணவர் தராதரம்—குறிப்பாக விஞ்ஞானபீடத்தில் இல்லை என்பது அவருடைய கவலையாயிருந்தது; அது அந்தக் காலம்.

பேராசிரியர் ஐவர் ஜென்னிங்ஸின் ஆட்சிக் காலம் முடிவடைய மக்கள் அபிலாஷைகள் ஜனநாயக அமைப்பில் உரம் பெற்றதும் பல்கலைக்கழக அமைப்பு உரிய மாற்றம் கண்டது.

இந்த நீண்ட வரலாறு நாட்டில் காலகதியில் ஆறு பல்கலைக் கழகங்களை உருவாக்கியது; இவையெல்லாம் ஒரே தரமுடையனவென்று எவரும் சொல்லத் துணியார்.

வித்தியாலங்கார, வித்தியோதய பிரிவேனாக்கள், ஒரு பேனாவின் அசைவால் உருவான பல்கலைக் கழகங்கள்; இவற்றை எவரும் நொண்டிக்குதிரைகளென்று சொல்ல முடியவில்லை

ஒன்பது வயதடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் — ஐந்து வருடம் வனாக வாழ்வு — திட்டமிடாத வகையில் தொடங்கியதால் இன்று பல பிரச்சினைகளுக்குள்ளாயிற்றென்று மானியக் குழுத்தலைவர் கலாநிதி கல்பகே பகிரங்கமாகக் கூறிவருகின்றார்.

அதுமட்டுமல்ல மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி இன்றும் ஒரு 'நொண்டிக் குதிரையாக'வே இருக்கின்றதென்று அவர் கவலைப்படுவதாக இலங்கை வானொலி கூறுகின்றது.

இவற்றிற்கு உறுதியளித்தாற்போல மூன்றுநாள் வெளியான 'சிலோன் ஒப்சேவர்' வாரவெளியீட்டில் முதல் பக்கத்தில் காணப்படும் இருசெய்திகள் பேராசிரியர் கல்பகேயின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துவதுபோல் தெரிகின்றது.

பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவரின் பொறுப்பு மிகப்பெரியது; அரச தலைவர் தலையீடு இல்லாது தம்முடைய பதவிக்குரிய அதிகாரத்தை செவ்வனெசெயற்படுத்துவாராஞல், நாம் குறிப்பிடும் முரண்பாடான செய்திகளை, விளக்கி விடுவது போதாது; அந்தநியாயமற்ற முரண்பாட்டை நீக்கப் பெரும் கடமைப்பட்டவர்.

றுகுணை பல்கலைக்கழகக் கல்லூரி இவ்வாறமே பூரணத்துவம் பெற்ற பல்கலைக்கழகமாகின்றதென்பது ஒரு செய்தி; சுமார் நான்கு வருடங்களில் அது இந்த உயர்ச்சிபெற்று 'றுகுணை பல்கலைக்கழகம், இலங்கை' என்ற பெயரில், மாத்தறையில் நிறுவப்படுகிறது. விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், மானிடவியல், சமுதாயவியல் பீடங்கள் அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. மற்றைய செய்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றியது.

ஐந்தாவது வருடத்தில் தென்னிலங்கை மக்களுக்கு உயர் கல்வி வசதி இவ்விதம் விஸ்தரிக்கப்படுவது பாராட்டுக்குரியது.

பத்தாவது வருடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும், ஐந்தாவது வருடத்தில் மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கும் ஏன் இந்த நொண்டிச் சாட்டுகள்?

## "ஆசா பாசங்களை அகற்றியவனே உண்மையான பக்தன்"

**- சட்டத்தரணி த. செல்வத்துரை -**

சில வகையான உணவு சிலவகையான தன்மைகளையும் மனப்போக்குகளையும் மனிதருக்குக் கொடுக்கக் கூடியன என்பதை மகாத்மா உணர்ந்திருந்தார். மக்கள் உட்கொள்ளும் உணவை சாத்விக, இராஜச, தாமச, என மூன்று வகைகளாகப் பிரிக்கலாமென 'பகவத்கீதை' எனும் நூல் பகர்கின்றது. சாத்வீக உணவு இனிமையானது மென்மையானது சுத்தமானது இராஜச உணவு உறைப்பானதாகவும் காரமானதாகவும் இருக்கும். தாமசஉணவு புளிப்படைந்ததாகவும் இனிமையற்றதாகவும் இருக்கும். மகாத்மா சாத்வீக உணவையே விரும்பினர். (இது சம்பந்தமாக, ஜீரணிக்காத ஒவ்வாத உணவு ஒருவனின் குடலினுள் இருந்தால் அது அவனின் மன அமைதியைக் குலைத்து வன் செயலைச் செய்யத்தூண்டுமென்று 'எனது கருத்து' என்ற கட்டுரைத் தொடரில் பேட்றண்ட்றசல் என்னும் அறிஞர் எழுதியிருந்தார்) ஒருவன் சுவையறியும் தனது நாவைக் கட்டுப்படுத்த முடியாது போனுல் தனது உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த முடியாதென மகாத்மாவும் பல இடங்களில் கூறியிருக்கின்றார். அத்துடன் தாவர உணவையே உட்கொண்டார்.

பகவத்கீதை போன்ற நூல்களிலிருந்து கருத்தாழமான பாக்களை மனனஞ்செய்யும் பழக்கமுடையவராக மகாத்மா இருந்தார். பிரதானமாகக் காலையில் மூச்சவரம் செய்யும் போது மனனம் செய்யும் பழக்க முடையவராக இருந்தார் நல்ல கருத்துக்கள் செறிந்த பாக்களையும், கருத்துரைப் பகுதிகளையும் ஒருவன் மனனம் செய்யும் பழக்க முடையவனுயின் வாழ்க்கை பூராகவும் அவன் மனனம் செய்யும் விஷயங்கள் அடிக்கடி நினைவுக்கு வந்து கொண்டிருக்கும். கருத்தின் சிறப்புக் காரணமாக ஒரு பந்தியை அல்லது ஒரு பாடலை ஒருவன் தெரிந்து மனனம் செய்யும் பழக்கம் அவனது சிந்தனைச் சுதந்திரத்திற்குத் தடையாகுமென்று சொல்ல முடியாது ஆழ்ந்த கருத்துள்ள சிறந்த சிந்தனைகள் ஒருவனின் மனதிலே இருக்கும் பொழுது அவனின் செயல்கள் நன்மை பயப்பனவாயும் ஆக்க பூர்வமானவையாயும் அமைகின்றன.

தனது பேச்சில் சொற்குற்றம் பொருட்குற்றம் ஏற்படாது காக்கும்பண்பு மகாத்மாவிடம் காணப்பட்டது. தனது மனதிலே எழும் கருத்துக்களை இரண்டாம் முறையும் பரிசீலனை செய்த பின்னரே வெளிப்படுத்தும் பழக்கம் உடையவராகத்தான் இருந்ததாக மகாத்மா கூறியிருக்கிறார். அவரின் பேச்சுக்களும் எழுத்துக்களும் உலகின் எப்பாகத்தில் உள்ளவர்களின் மனங்களையும் நோகச்செய்யாதனவாக அமைந்திருந்தன ஒவ்வொரு மனிதனிலும் உள்ள தெய்வத்தன்மைக்கு மகாத்மா கௌரவமும் மதிப்பும் கொடுத்தார். எவ்வளவோ வேதனைகளை அனுபவித்த சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் மற்றையோரை வேதனைப்படுத்தும் வார்த்தைகளைப் பேசியதேயில்லை

உலக பண்பாட்டிற்கும் சீர்திருத்தத்திற்கும் மகாத்மாமா அளித்த பங்களிப்பு உண்மை வழியைக் கடைப்பிடித்தது மாத்திரம் அல்ல. அவர் நிலைநாட்டிய அகிம்சா தர்மமுமாகும் என்பதை உலகம் நன்கு அறியும். அகிம்சா தர்மத்தைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய மன வலிமையையும், உத்வேகத்தையும் அடைவதற்கு அவர் பகவத் கீதை, பைபிள், திருக்குரான் மற்றும் சமய நூல்களையும் தினமும் படித்தார். பகவத் கீதை வன்செயலைப் பாராட்டும் நூல் என்று ஒரு தவறான அபிப்பிராயம் சிலர் மத்தியில் நிலவி வருகின்றது 'மகாத்மா காந்தியின் வாழ்க்கை'' என்ற தலைப்பில் லூயி பிஷரால் எழுதப்பட்ட நூலிலே (பகுதி 1 பக்கம் 89) பின்வரும், கீதை வன்செயலை ஆதரிப்பதில்லை என மகாத்மா ஆணித்தரமாகக் கொடுத்திருக்கும் விளக்கத்தைக் காட்டுகிறது

'முதல் முதலாக 1888-89இல் காந்தி கீதையை வாசித்த பொழுது அது ஓர் சரித்திர நூல் அல்ல என்பதை அவர் உணர்ந்தார் மகா பாரதமும் அவ்வாறே என்று பின்னர் எழுதியுள்ளார். மறைமுகமாக அருங்கருத்துக்களைப் புலப்படுத்தும் நூலே கீதை என்று காந்தி கூறியுள்ளார். மனிதனின் ஆத்மாவே யுத்த களம் அருச்சுனன் சிறந்த குணங்களின் பிரதிநிதியாகவிருந்து கொடிய சக்திகளை எதிர்த்துக் கொண்டிருக்கின்றான். கிருஷ்ணர் நெஞ்சகத்திலிருந்து தூய உள்ளத்துடன் இடையறாது பேசிக்கொண்டிருக்கிறார் கீதையில் குறிப்பிடப்படும் போர், மனிதர் இதயங்களிலேயே, உயர்ந்ததும் இழிந்ததுமான சக்திகளுக்கிடையே இடையறாது நடந்துகொண்டிருக்கும்ஓர் போராட்டத்தையே விளக்குகிறது என்று காந்தி நிலைநாட்டினர். இதயங்களில் நடக்கும் போரைத்தெளிவுபடுத்திக் காட்டவே வெளியில் நடக்கும் யுத்தம் உதாரணமாக்கப்பட்டது. கீதை மகாத்மாவை பொறுத்தமட்டில் சமய சம்பந்தமான ஆராய்ச்சி நூலாகவும் அன்றாட வாழ்க்கை வழிகாட்டியாகவும் அமைந்திருந்தது.''

1931ம் ஆண்டு மார்ச் 6ந் திகதி 'யங் இந்தியா' என்னும் பத்திரிகையில் கீதையில் கூறப்பட்ட பக்தன் எவ்வித சிறப்புகளும், குணாதிசயங்களும் உடையவன் என்பதை மகாத்மா சுருக்கிக் கூறியிருக்கிறார். அப்படியான பக்தன் வன்முறையில் எக்காலமும் நாட்டங்கொள்ளமாட்டான். சொல்லப்பட்ட பக்தன் பின்வரும் சிறந்த குணாதிசயங்களை உடையவன்.

''எவன் மற்றையோரில் பொறாமைகொள்ளாதவனும், தயவுடையவனும், ஆணவமற்றவனும், சுயநலமில்லாதவனும், வெப்பம், தட்பம், துன்பம், இன்பம் யாவற்றையும் சமமாகப் பாராட்டுபவனும், மன்னிக்கும் சுபாவமுடையவனாகவும், திருப்திகொண்ட மனமுடையவனாகவும், தீர்மானத்தில் உறுதியுடையவனாகவும், சிந்தனையையும் ஆன்மாவையும் கடவுளுக்கு அர்ப்பணிப்பவனும் அச்சத்தை ஏற்படுத்தாதவனும் மற்றையோருக்குப் பயப்படாதவனும், இன்பம், துன்பம், அச்சம் ஆதியனவால் தாக்கப்படாதவனும், தூய்மையுள்ளவனும், செயற்திறன் படைத்தவனும் அதை விட்டுக் கர்வமடையாதவனும், பயன்களை எதிர்பார்க்காதவனும், நண்பனையும் விரோதியையும் சமமாக நடத்துபவனும், மதிப்பும், மதிப்பீனத்தாலும் பாதிக்கப்படாதவனும்,பாராட்டாலெபெருமை அடையாதவனும், மக்கள் அபாண்டமாகத் தன்னைப்பற்

(5ம் பக்கம் பார்க்க)

## பனைவள அபிவிருத்தி: ஏப்ரலில் பாரிய திட்டங்கள்

(நலூர்)

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இலங்கையில் பனைவளத்தை அபிவிருத்தி செய்யும் முயற்சிகள் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாக உள்ளன.

ஐ. நா. சபை வழங்கும் இருநூற்றைம்பது ஆயிரம் டாலர் நன்கொடையின்கீழ் பனைவள அபிவிருத்திசபை அமுலாக்க உள்ள இத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் 1984—86ஆம் ஆண்டுகளில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது

பனைவள அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. கே. நடராசா ஐ நா. நிறுவன அதிகாரிகள் அரசாங்க அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பூர்வாங்க முயற்சிகளை ஏப்ரல் மாதம் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

''பனைவள பொருட்களை உற்பத்தி செய்யும் உத்திகளை விருத்தி செய்து நவீனப்படுத்துவதுடன், அவ்வுற்பத்திப் பொருட்களை உள்ளூரிலும், வெளியூரிலும் சந்தைப்படுத்துவதும் இப்புது முயற்சிகளின் நோக்கமாகும். அத்துடன்பனைவள அபிவிருத்தி முயற்சிகள் மூலம் கிராமப்புறங்களில் இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்'' என்று இத்திட்டம் சம்பந்தமான அறிக்கையில் கூறப்பட்டுள்ளது ஐ நா. நிறுவனத்துடன் இணைந்து பனைவள அபிவிருத்திசபை தயாரித்துள்ள இவ்வறிக்கையில் மேலும்கூறப்படுவதாவது;

''முன்னூறாயிரம்பேர் கள்ளிறக்கும் தொழிலிலும், பனையோலை, பனம்பழம், பனந்தும்பு சம்பந்தப்பட்ட முயற்சிகளில் மேலும் ஐம்பதாயிரம் பேரும் ஈடுபட்டு ஊதியம் பெறுகின்றனர். எனினும் இவர்கள் பெறும் ஊதியம் மிகவும் சொற்பமே. எனவே பனைவளத்தினை விருத்தி செய்வது மூலம் இத்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தலாம். ஐம்பத்தெட்டாயிரம் ஏக்கர் நிலத்தில் நூறுலட்சம் பனைமரங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் எழுபத்தைந்து ஆயிரம் பனைமரங்கள் உள்ளன. இவற்றை முழுமையாகப்பயன்படுத்தி ஆகக் கூடிய பயன்பாட்டைப் பெறுவதும் இத்திட்டத்தின் இலக்காகும்'' என்றும் இவ்வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# "சவூதிக்கான மே.ஜெர்மனியின் ஆயுதவிற்பனை பரிசீலனை செய்யப்படும்"

## இஸ்ரேல் தலைவர்களுக்கு ஹெல்மட்கோல் உறுதி!

ரெல்அவிவ், ஜன. 30

சவூதிஅரேபியாவுக்கு நவீன ரக போர் ஆயுதங்களை விநியோகிப்பது தொடர்பான தனது திட்டத்தை மேற்கு ஜெர்மனி மறுபரிசீலனை செய்யவுள்ளது

மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்மட்கோல் தமது ஆறு நாள் இஸ்ரேலியப்பயணத்தின் முடிவில் இஸ்ரேலியத் தலைவர்களுக்கு இந்த உறுதிமொழியை அளித்தார்.

இந்த ஆறுநாட்களிலும் அவர் கலந்து கொண்ட சகல பேச்சுக்களின்போதும் சவூதி அரேபியாவுக்கான ஆயுதவிற்பனை பற்றியே இஸ்ரேலியத் தலைவர்கள் . வலியுறுத்தினர் இதன் பின்னர் ஹெல்மட்கோல் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

தமது பயணத்தின் முடிவில் பேசியஹெல்மட்கோல்; 'ஹிட்லர் 60 லட்சம் யூதர்களை கொன்றுரி அந்த ஜெர்மனியின் சார்பாக நான்இங்குவரவில்லை. யூத இனத்துடனும் இஸ்ரேலுடனும் சமமான நட்புறவினை பேணும் புதிய ஜெர்மனியின் பிரதிநிதியாகவே வந்திருக்கின்றேன்'' என்று குறிப்பிட்டார்.

மேற்கு ஜெர்மனி யூத இனத்தையும், இஸ்ரேலிய அரசையும் தொடர்ந்து பாதுகாத்து வருமென்றும் அவர் உறுதியளித்தார். (சூ)

## அரச சொத்துக்கு சேதம் விளைவித்தால் கடும் தண்டனை!

### இந்தியாவில் அவசரசட்டம்

புதுடில்லி, ஜன. 30

இந்தியாவில் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போருக்கான தண்டனை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போருக்கு முன்னர் 6 மாதம் முதல் 5 வருடம் வரை தண்டனை வழங்கப்பட்டது. இப்போது 10 வருடங்களாக இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அவசரச் சட்டம் அண்மையில் இந்திய ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்டது.

பஞ்சாப்பிலும், ஏனைய சில மாநிலங்களிலும் அதிகரித்திருக்கும்வன்முறைகள் காரணமாக புதிய சரத்துக்கள் நேற்று இந்திய தண்டனை ஒழிப்புச் சட்டத்துடன் சேர்க்கப்பட்டன.

இதற்கிடையே பஞ்சாப்பினை குறித்து ஆராய மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட கமிட்டி பஞ்சாப்பில் தீவிரவாதிகளின் செயல்களை முறியடிக்க அரசின் செயற்பாடு போதாதென்றும் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறது. (சூ)

## இலவச பாடப்புத்தகம் விநியோகம் ஆரம்பம்

(புலோலி)

அரசாங்கத்தின் இலவச பாடப்புத்தக விநியோகத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு இவ்வாண்டிற்கான இலவச பாட புத்தகங்கள் வழங்கும் வைபவம் புலோலிவேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. வி. எஸ் ஏகாம்பரநாதன் தலைமையில் இன்று நடைபெறுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உபதலைவர் திரு. எம். பி வீரவாகு இலவச புத்தக விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார் என்றும் இதனைத் தொடர்ந்து 6-ம் திகதி வரை கல்விச்சேவைகள் அமைச்சின் பணிப்பின்படி பாடசாலை வாரம் கொண்டாடப்படுமென்றும் அதிபர் திரு. ஏகாம்பரநாதன் தெரிவித்தார்.

பாடசாலைவாரத்தின் போது மாணவர்கள் மத்தியில் பாடசாலை அபிவிருத்தி பற்றிய உணர்வுகளை ஏற்படுத்தல் சிரமதான நடவடிக்கைகள் நூல்நிலையத்தை ஒழுங்கு படுத்துதல் போன்றநடவடிக்

(7-ம் பக்கம் பார்க்க)

## அப்கானிஸ்தான் பிரஜைகளினால் பாகிஸ்தானுக்கு தலையிடி!

இஸ்லாமபாத், ஜன. 30

அப்கானிஸ்தானிலிருந்து அகதிகள் என்ற போர்வையில் பாகிஸ்தான் பிரதேசத்தினுள் நுழைந்திருக்கும் லட்சக் கணக்கான அப்கான் பிரஜைகளினால் இப்போது பாகிஸ்தானில் பிரச்சனை எழுந்தது.

அப்கானிஸ்தானை அண்டிய பாகிஸ்தான் எல்லையில் சுமார் 30 லட்சம் அப்கான்பிரஜைகள் தங்கியிருக்கின்றனராம். இவர்கள் விவகாரத்தில் ஜனாதிபதி ஸியாவுல்ஹக் ஆதரவாகவே இருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரம் குறித்து பாகிஸ்தானில் ஜனநாயக மீட்புக்காக போராடும் இருஎதிர்க் கட்சித் தலைவர்கள்; ''பாகிஸ்தானில் தங்கியிருக்கும் அப்கான் பிரஜைகள் பாகிஸ்தானியர் போலவே நடந்துகொள்கின்றார்கள். அவர்கள் பாகிஸ்தானில் மத்திய பகுதிகளில் குடியேறியிருப்பதுடன். பயிர்செய்கை, மந்தைமேய்ப்பு போன்ற தொழில்களிலும் ஈடுபட்டுவருகின்றார்கள். அத்துடன் பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் இவர்கள் திரண்டு வந்து பாகிஸ்தானியருடன் போட்டிபோட்டு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றார்கள். இதனால் பாகிஸ்தானியர் பலத்த பாதிப்புக்குள்ளாக வேண்டியேற்பட்டுள்ளது. உள்நாட்டில் பல நெருக்கடிகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் ஜனாதிபதி ஸியாவுல்ஹக் அப்கான் பிரச்சினையை முன்வைத்தே தமது ஆட்சியை காப்பாற்றி வருகின்றார். அதனால் அவர் அப்கான் பிரஜைகளுக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்.'' என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பழனி ஆண்டவர் அபிஷேகங்கள் இடை நிறுத்தம்!

சென்னை, ஜன. 30

பழனிமலை மூலஸ்தான தண்டாயுதபாணி விக்கிரகத்தில் தேய்மானம் ஏற்பட்டுள்ளது. இதனால் இவ்விக்கிரகம் மீது நடத்தப்படும் அபிஷேகங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பூஜைகள் மட்டுமே மீண்டும் அபிஷேகம் ஆரம்பிக்கப்படும்வரை நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

பழனிமலைமூலஸ்தான தண்டாயுதபாணி ஆண்டவர் விக்கிரகம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. நவபாஷாணங்கள் கொண்டு உருவாக்கப்பட்டது இவ்விக்கிரகத்திற்கு அதன் ஸ்தாபன காலம் தொட்டு இன்று வரை இடைவிடாது அபிஷேகங்கள்செய்யப்படுவது வழக்கமாகும். இதனாலேயே இதன் உருவத்தில் தேய்மானம் ஏற்பட்டிருக்கிறது

தமிழக அறநிலைத்துறை அமைச்சு இது குறித்து உடன் வெளிஇறங்கியுள்ளது. இதன் சிபாரிசின் அடிப்படையிலேயே இவ்விக்கிரகத்திற்கான அபிஷேகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையின்கீழ் விசேட நிபுணர்கள் குழுவொன்றும் பழனி ஆண்டவர் தேய்மானத்தை நிவர்த்திசெய்ய நியமிக்கப்பட்டுள்ளது. (கி)

## இதுவரை 27 ஆயிரம் பேர்பரிசோதனை:

# 1100 பேருக்கு புற்று நோய்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் வாய் புற்றுநோய் தொடர்பான ஆய்வின் பயனாக இதுவரை சுமார் 1100 பேருக்கு வாய் புற்றுநோய் அறிகுறி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனமும், சுகாதாரப் பகுதியினரும் இணைந்து காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இந்த வாய் புற்றுநோய் ஆய்வை மேற்கொண்டுள்ளனர்,

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ. தெய்வேந்திரனின் மேற்பார்வையில் இப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்களும், மருத்துவ மாதர்களும் வீடு வீடாகச் சென்று இந்த ஆய்வை மேற்கொண்டு வந்தனர்.

இதுவரை 27 ஆயிரம் பேர் வரை இந்தப் பரிசோதனைக்குட்பட்டதாகவும், அதில் 1100 பேருக்கு வாய் புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகள் காணப்பட்டதாகவும், அவ்வாறானவர்களைத் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய நிபுணர் மூலம் பரிசோதித்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கிய போதும் 500 பேர் மட்டுமே இவ்வாறு பரிசோதித்துக் கொண்டதாகவும், ஏனையோர் கவலையீனமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மயிலிட்டிக்கரைப் பகுதியில் கூடுதலாகவும், அடுத்து அளவெட்டிப் பகுதியிலும் மேற்படி வாய்ப்புற்று நோயின்அறிகுறியுள்ளவர்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்கு வெற்றிலை புகைத்தல் ஆகியன காரணமாகவே பெரும்பாலும் வாய் புற்றுநோய் ஏற்படுவதாகவும் இதன் ஆரம்ப அறிகுறி தென்பட்டவுடன் சிகிச்சை மேற்கொண்டால் நோயைக் குணப்படுத்திவிடலாமெனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

கவலையீனமாக இருந்தால் நோய் வளர்ந்து உயிருக்கே ஆபத்தாகிவிடுமெனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## தன்ஸானியா துணைஅதிபர் பதவி விலகினார்!

(லண்டன்)

தன்ஸானியாவின் துணை அதிபர், பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இவரது ராஜினாமாவை தன்ஸானியாவின் ஆளும்கட்சி ஏற்றுள்ளது.

அரசியல்நிர்ப்பந்தம் காரணமாக இவர் பதவி விலகியிருக்கலாமென்று நம்பப்படுகிறது. (சூ)

## வெள்ள நிவாரணம்

மன்னார்

மன்னார்மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 3,620குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது. அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3 ஆயிரம் குடும்பங்களுக்கும் நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 400 குடும்பங்களுக்கும் மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 220 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

## பண்டத்தரிப்பில் 'டிங்கி' ஜுரம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் 'டிங்கி'க் காய்ச்சல் ஒன்றுவேகமாகப் பரவிவருகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள பனியும் வெய்யிலுமான காலநிலையே இதற்குக் காரணமாகத் தெரிவிக்கப்படுகிறது. காய்ச்சல், மூட்டுக்களில் பலத்த வலி, தலையிடி என்பனஇந்த நோயின் அறிகுறியாகும். பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் தினமும் தற்போது சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

★ திருமணம் ★ பிறந்தநாள் மற்றும் இன்னோரன்ன மங்கள வைபவங்களை

சிறந்த முறையில் எழில்மிகு வண்ணக் கலரில் வீடியோ படப்பிடிப்பு செய்துகொள்ள

சித்திராலயா

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22522

### "பத்திரிகையாளர்கள் தமது பேனுக்களை

# பொறுப்புணர்ச்சியுடன் பயன்படுத்த வேண்டும்"

## யாழ். மாநகரசபை ஆணையாளர் கூறுகிறார்

(மானிப்பாய்)

"நல்ல தரமான முன்னேற்றங்களின் பெரும்பணியில் பத்திரிகையாளர்கள் எப்போதுமே முன்னின்று உழைத்து வந்துள்ளார்கள். இருட்டிலிருந்து ஒளிக்கு, மடமையிலிருந்து அறிவுக்கு, தேவையற்ற பழமையிலிருந்து நவீன புதுமைக்கு மக்கள் சமூகத்தை மெதுவாக அழைத்துச் செல்பவர்கள் பத்திரிகைக்காரர்கள் என்பது மறுப்பதற்கில்லை. இந்தப் பெரிய பாரிய பொறுப்பை உணர்ந்து மிக்க அவதானத்துடனும் பொறுப்புணர்ச்சியுடனும் பத்திரிகையாளர்கள் தமது மதிப்புமிக்க பேனாவைப் பயன்படுத்த வேண்டும்".

இவ்வாறு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் எடுத்துக் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. எஸ். எஸ். குஹநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சிவஞானம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எமது சமூகத்தின் வளர்ச்சி போதும் என்று திருப்தி அடைந்துவிடக்கூடிய நிலையில் நாம் இல்லை.

"இந்த நிலையினை மாற்றி முன்னேற்றமடைந்துள்ள நவீன நிலைகளுடன் பொதுநலத்துடன் தொடர்பு படுத்தி இழுத்துச் செல்ல பத்திரிகையாளர்கள் முன்வர வேண்டும்."

"நல்ல சந்திப்புக்கள் நல்ல பலன்களைத் [illegible] தருகின்றன. இதனை நன்குணர்ந்தே பத்திரிகையாளர்களுக்கு ஒரு இருப்பிட வசதி தேடிக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபடத் தாம் முன்வந்ததாகவும் தெரிவித்த ஆணையாளர் சங்கம் மிக்க பொறுப்புடனும் ஐக்கியத்துடனும் செயலாற்றி முன்னேறத் தாம் பிரார்த்திப்பதாக எடுத்துக் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. எஸ். எஸ். குஹநாதன் தமது தலைமை உரையில் கூறியதாவது:

காணிப்பிரச்னைகள் அதிகரித்துள்ள யாழ்ப்பாணத்தில் இடவசதியைக் குறுகிய காலத்தில் தேடித்தந்தமைக்காக சங்கத்தின் சார்பில் தாம் ஆணையாளருக்கு மிக்க நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

இன்னும் நிரந்தரமானதொரு இடத்தை ஆணையாளர் தேடித்தர முன்வந்துள்ளமை மிக்க வரவேற்கத்தக்கதாகவே இருப்பதாகவும் அவர் எடுத்துக் கூறினார்.


அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கும் பத்திரிகையாளர்கள் ஒன்றுகூடி தம்மைப் பற்றியும் சமூகத்தின் நிலை பற்றியும் நன்கு ஆராய ஒரு தனி இடம் தேவை எனவும் இந்த எண்ணம் ஓரளவு இப்போது பூர்த்தி பெற்றுள்ளமை மிக்க மகிழ்ச்சியாக உள்ளது என்றும் கூறினார்.

திரு. பி. எஸ். பெருமாள் பேசுகையில் சங்கம் சிறிதுகால ஆரம்பத்தைக் கொண்டிருந்தாலும் தனக்கென ஒரு இடம் இந்தக் குறுகிய காலத்தில் தேடிக் கொண்டுள்ளமை உண்மையில் பாராட்டப்பட வேண்டியது என்றும் கட்டுக்கோப்பு குலையாமல் சங்கத்தைக் கொண்டு செல்வது எல்லோரது பெரும் பொறுப்பு என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். திரு. எம். செல்வராஜா பேசுகையில் மறைந்த பிரபல நிருபர் திரு கதிரவேலு அவர்களுடைய உருவப்படத்தையும் சங்கமனையில் திரை நீக்கம் செய்துவைக்கப்பட வேண்டுமென வேண்டுகோளொன்றை விடுத்தார்.

திரு. எஸ். இ. எஸ். சிதம்பரநாதன் பேசுகையில் சங்கத்தின் நோக்கம் பரந்ததாகவும் புனிதமாகவும் இருந்தால் நிச்சயம் தடையின்றி அது வளர்ச்சி பெறும் எனக் கூறினார்.

திரு. என். சண்முகநாதன், திரு. எஸ். சுரேந்திரன் ஆகியோரும் பேசினர்.

பிரபல பத்திரிகை ஆசிரியர் திரு. கே. பி. ஹரன், பிரபல பத்திரிகை நிருபர் திரு. எஸ். செல்லத்துரை ஆகியோரின் உருவப்படங்கள் முறையே ஆணையாளர் திரு. சிவஞானம் திரு. பெருமாள் ஆகியோரால் திரை நீக்கம் செய்து வைக்கப் பட்டது. திரு. க. கணேசலிங்கம் நன்றி கூறினார். சங்கத்தின் புதிய அலுவலகம் யாழ். திறந்த வெளி சதுக்கத்தில் அமைந்துள்ளது.



சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தநாயக்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது யாழ். டாக்டர்களினால் அவருக்கு ஹோட்டல் ஞானம்ஸில் அளிக்கப்பட்ட மதிய போசனத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## இன்றைய பலன்

தை மாதம் 17ம் திகதி
31—1—84
செவ்வாய்க்கிழமை

மேடம்: எதிர்பார்த்த பொருள் வரவுக்கு இடமுண்டு பூமியால் லாபமுண்டு புத்திரர் வழியாலும் நன்மையுண்டு.

இடபம்: சுற்றுடலில் உங்கள் வாக்குவளரும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள் குடும்பத்தில் பிணக்குகள் பலமடையும் சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கும்.

மிதுனம்: அன்பின் பிணைப்பு உங்களைப் பரவசப்படுத்தும் காதல் விவகாரம் தலைதூக்கும் சிலருக்குப் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு.

கடகம்: முன்னேற்றப்பாதையில் இரும்புத்திரை தொங்கவிடப்படுகின்றது ஆத்திரம் மேலோங்கும் ஆபத்தும் அருகில் வரும் ஆணவப் போக்கு அமைதியைக் குலைக்கும்.

சிங்கம்: வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும் நீண்ட நாள் கோரிக்கை இன்று நிறைவேற்றப்படலாம் புத்திர சுகமும் உண்டு அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

கன்னி: பிரிவின் நெருடல் வேதனையைத்தரும் தொழில் துறையிலும் பின்தங் நேரிடும் சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கு இடமுண்டு மனத்திடம் விரும்பத்தக்கது.

துலாம்: உறவுகள் பலப்படும் உள்ளத்தில் உவகையுள்ளும் உள்ளத்தில் இனிய எண்ணங்கள் இடம் பெறும் உயர்வுக்கு வழி பிறக்கும் வேண்டிய நண்பர் ஒருவரின் சந்திப்பும் உண்டு திருமணப் பேச்சும் இடம் பெறலாம் உவப்பான தினம்.

விருச்சிகம்: இதயத்தில் துன்ப ரேகை துயரத்தைத் தோற்றுவிக்கும் இல்லறத்தில் பூசல்கள் தோன்றி மறையும் ஆசை காட்டி மோசம் செய்பவர்கள் எத்தனிப்பர் அமைதியுடன் செயல்படவும்.

தனுசு: அற்ப ஆசை ஆபத்தில் மாட்டிவைக்கும் [illegible] கெடுப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெறும் சிறு விடயத்திற்குக்கூட மற்றவர்கள் நறை கூறுவார்கள் கவனமாக நடக்கவும்.

மகரம்: அதிகாரப் பெருக்கும் அதிக பொருள் வழியிற்கும் இடமுண்டு ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள் குடும்பத்திலும் அதிக மகிழ்ச்சி தென்படும்.

கும்பம்: அவசரப் போக்கு சிக்கலைத் தோற்றுவிக்கும் புத்திரர் ஒருவரின் திருமணமும் கிட்டும் மனதில் விரக்தி தோன்றும் வீணான சிந்தனையினால் சோர்வு தோன்றும் மகிழ்ச்சிகரமான தினம்.

மீனம்: தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய ஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம் உடல் நிலையில் [illegible] நல்ல முன்னேற்றம் தென்படுகிறது உற்சாகமான தினம் நண்பர்களின் உதவியும் அவசியம் உண்டு.


சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | ஏ. பி. ஸி. உலக விளையாட்டுக்கள் |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7-45 | 'புறொஜெக்ட் யு. எவ். ஓ' மர்ம விண்வெளிப் பொருட்கள் பற்றிய சித்திரம் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | 'புறொஜெக்ட் யு. எவ். ஓ' (தொடர்ச்சி) |
| 9-05 | நாடக நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | ஆங்கில இசை நிகழ்ச்சி |
| 10-30 | உலகச் செய்தித் தலையங்கங்கள் |
| 10-35 | இசை நிகழ்ச்சித் தொடர்ச்சி |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு. |


# பிலிப்ஸ் வழங்கும் தன்னியக்கச் சுழல் மின் விசிறிகள் 2 உன்னதத் திருப்தி அம்சங்கள் கொண்டவை



1. உட்புறம் சக்தி மிக்கது. சப்தம் அற்றது.

சிறப்பம்சங்கள்:

■ நீடித்துழைக்கும் தரமுயர்ந்த பிலிப்ஸ் உறுப்புகள்.

■ உச்சச் சக்தி தரும் சப்தமற்ற மோட்டார்.

2. வெளிப்புறம் - கவர்ச்சி மிக்க நவீன தோற்றம்.

■ உலோக அலகுகள்.
(4 அலகுகளுடனும் கிடைக்கும்.)

■ வலம். இடமாக 90 பாகைக்கும் மேலாகச் சுழலும்.

■ 3 வேகங்கள். 4 அழுத்து விசைகள் மூலம் இயங்கும்.


விலை: ரூ2000/= அமெரிக்க டொலர்: 33

இலங்கையில் பிலிப்ஸ் நிறுவனத்தின் ஏக பிரதிநிதிகள்:

ஹேலீஸ் லிமிட்டெட்.
25, வொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 91181 - 9

காட்சிச்சாலை:
646. காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 86958

மேலும் கிடைக்குமிடம்: தீர்வையற்ற, தரைத் தளக் கடை எண் 2 தீர்வையற்ற வர்த்தக வலயம், கொழும்பு 3.



PHILIPS

பிலிப்ஸ் துணையுடன் அதி சிறந்ததை அளிப்போம்.

ராணி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
Today Only
GREASE - II
1st—2nd AWAKENING

வெலிங்டன் / வெல்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
பாக்கியராஜ்சத்தியகலா
விடியும்வரை
காத்திரு
(புதிய பிரதி-கலர்)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
In Space,
No one can hear
you Laughing!
FLYING HIGH II
THE SEQUEL
an action comedy film
dont miss!

கடைசி 2 தினங்கள்
ராஜா (யாழ்நகர்)
முள்ளும் மலரும்
2-2-84
தினசரி 10-30, 2-30 6-00
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா
நல்ல நேரம்
(புதிய பிரதி)

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)
3- 2- 84 முதல்
அன்னமிட்டகை

மனோகரா (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15,
4-45, 7-00 p. m. 9-30
Now Showing
DE BORIS — DUROV
IN
"Pirates of the
20th Century"
Action Packed
Scope Color
திகிலூட்டும் சம்பவங்கள்
நிறைந்தன.

ஹரன் (யாழ். நகர்)
சிவாஜி, ஸ்ரீப்பிரியா,
மனோரமா, தேங்காய், V.K.
ராமசாமி, சுந்தரராஜன்
நடித்த
A. C. திரிலோகச்சந்தரின்
வசந்தத்தில்
ஓர் நாள்
(ஈஸ்மன் கலர்)
இசை: M. S. விஸ்வநாதன்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
CUBA
2-3-84 முதல்
நீதிக்கு தலைவணங்கு

லிங்கன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே
வரும் கீதம்
(ஈஸ்மன் கலர்)

# மன்னார்ச் செய்திகள்

## வெளிச்ச வீடு அமைக்கப்படும்

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தலைமன்னார் புதுவாக்கிக் கடற்பரையில் வெளிச்சவீடு ஒன்று அமைக்கப்படும். இவ்வெளிச்ச வீட்டை அமைப்பதற்கு 15 ஆயிரம் ரூபா செலவிடப்படும்.

## முதலிடம் பெற்றார்

குறைந்த செலவில் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் விடத்தல்தீவு கிராமோதய சபை பிரிவில் நடத்தப்பட்ட போட்டியில் திரு. பொன். இராமநாதன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். இவர் 600 ரூபா செலவில் வீடு ஒன்றை அமைத்துள்ளதாக விடத்தல் தீவு விசேட சேவை அலுவலர் ஜனாப் எஸ். எச். முகமட் ஜவலி தெரிவித்தார்.

## கடிகாரம் அன்பளிப்பு

தலைமன்னார் கிராமோதய சபை 600 ரூபா பெறுமதியான சுவர்க்கடிகாரம் ஒன்றை மன்னார் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இச்சுவர்க் கடிகாரத்தை தலைமன்னார் கிராமோதய சபையின் சார்பில் விசேட சேவை அலுவலர் திரு. தோமஸ் மிராண்டா மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பாஸ்கரதாஸிடம் கையளித்தார்.

## ஆலோசகர்களாக நியமிக்கப்படுவர்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கிராமோதய சபைத் தலைவர்கள் தமது கிராமோதய சபை பிரிவிற்குட்பட்ட உப அலுவலகங்களின் ஆலோசகர்களாக நியமிக்கப்படுவார்கள். ஆலோசகர்களாக நியமிக்கப்படும் கிராமோதய சபைத் தலைவர்களுக்கு உப அலுவலகங்களில் தனியானதொரு அலுவலகமும் வழங்கப்படும்.

## இலவச

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும் அதிபர் திரு. தோ. செபமாலை தலைமையில் இவ்வைபவம் இன்று நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ஸர் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
வேது வெற்றி மாதர்மாதம்!
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
கடற்கரைக் கிராமத்தில் சிட்டாகப் பறந்து வானம்பாடியாய் - ஆனந்தராகமாய் சுருதியை மீட்டிவரும் காதல் ஜோடிகளின் கண்கவர் வண்ண ஓவியம். ஈழத்திரை வானிலே இசையின் தேன் வெள்ளமாய் பெருக்கெடுத்து அநேகரின் இதயத்தைக் கவர்ந்த இசை ஓவியம்.

7 "சூப்பர் ஹிட்" பாடல்களுடன் மங்கையர் மனங்கவர்ந்த வண்ண காதலோவியம்.
ரீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,



மோகன்... பூர்ணிமா
பயணங்கள்
முடிவதில்லை

## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்
## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

காரைநகர் வாரிவளவு, காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பிராஜாவின் மரணசாதனம் சம்மந்தமான மரணசாதனத் தத்துவப்பத்திரம் பெறும் விண்ணப்ப விடயத்தில்.

காலஞ்சென்றவர்

வழ. இல: ரி/86

அம்பலவாணர் தம்பிராஜா கைம்பெண் தல்லம்மா, வாரிவளவு காரைநகர்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1983-ம் ஆண்டு மார்கழி மாதம் 30-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983-ம் ஆண்டு மார்கழி மாதம் 30-ந் திகதி

நடராசா
பதிவாளர்.
ஊர்காவற்றுறை
மாவட்ட நீதிமன்றம்.

வரைதல்:
செ. மகேசன் (ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

400

## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்
## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

வேலணை கிழக்கு காலஞ்சென்ற அருணாசலம் சிவகுருநாதனின் மரணசாதனம் சம்மந்தமான மரணசாதனத் தத்துவப்பத்திரம் பெறும் விண்ணப்ப விடயத்தில்.

காலஞ்சென்றவர்

வழ. இல: ரி/85

அருணாசலம் சிவகுருநாதன் கைம்பெண் அன்னம்மா வேலணை கிழக்கு வேலணை.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1983-ம் ஆண்டு மார்கழி மாதம் 16-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1983-ம் ஆண்டு மார்கழி மாதம் 16-ந் திகதி.

நடராசா
பதிவாளர்
ஊர்காவற்றுறை
மாவட்டநீதிமன்றம்

வரைதல்:
செ. மகேசன் (ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி

399

இதோ உங்களுக்கோர்
நற்செய்தி
ஆவி ஆத்மா சரீரத்தில் உமது வாழ்க்கையில்
அற்புதம் அனுபவிக்க
இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள்
யாழ். திறந்தவெளி அரங்கில்
நான்கு தினங்கள் மட்டும்
மாசி 1 புதன் தொடங்கி 4 சனி வரை
தினசரி மாலை 5 மணிக்கு
கனடாவைச் சேர்ந்த சர்வதேச சுவிசேஷகன்
லென் லின்ஸ்ரோம்
யாழ். நகர் நற்செய்தியைக் கொண்டு வருகின்றார்.
வாருங்கள்! கேளுங்கள்!!
இலவசமாய் பெறுங்கள்!!!
499

## அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

பொதுநம்பிக்கைச் சட்டம் 42 (2) பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்ப விடயத்தில்

வழக்கு இலக்கம்
நம்பிக்கை ரீ. ஆர். 127

1. தியாகராசா நாகராஜா
   பெண் சுந்தரவல்லி,
   சிவன்கோவிலடி புலோலி கிழக்கு
   புலோலி பசுபதீஸ்வரன் கோவில் பரம்பரைத் தர்மகர்த்தா என்ற வகையில்
2. தியாகராசா நாகராஜா
   சிவன்கோவிலடி, புலோலி கிழக்கு

மனுதார்கள்

புலோலி பசுபதீஸ்வரன் கோயிலுக்குரியதும் பின்னர் காணும் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனங்களை விற்பனைசெய்ய குறித்த கோவிலின் தர்மகர்த்தா சபையினர் என்ற வகையில் மேற்குறித்த மனுதார்கள் இம்மன்றில் விண்ணப்பித்துள்ளார்கள். ஆகையால் இவ்விண்ணப்பத்துக்குஆட்சேபனை ஏதும் இருப்பின்அவற்றைஇவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரும் இம்மன்றில் 1984ம் ஆண்டு மாசி மாதம் 15ம் திகதி 9-30 மணிக்கு தோற்றி தெரிவிக்கலாம் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### மேற்குறித்த அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி வரணிக் கோயிற்பற்று;

1. வடக்கு குறிச்சியிறை பழுதனை வயலும் மருபிரிவும் நெற்பர. 53, 3/8. மேற்குப் பக்கமாக நெற்பர. 88, 3/8. இதில் கிழக்கு அரைவாசிக்கு நெற்பர. 19, 3/16. இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் கந்தர் சின்னத்தம்பிக்கும் மருபேருக்குமுடைய வாதனங்கள், மேற்கு கந்தையா பெண் கற்பகத்துக்குடைய வாதனம், தெற்கு கதிரேசஐயர்சொக்கநாதஐயருக்குடை ஆதனமும் குளமும், இவ்வெல்லைக்குட்பட்ட வயல் காணி முழுவதும்.

2. ''ஷையிறை', பலாலைவயல் குளத்திற்குக் கிழக்கு நெற்பர 48 இதில் மேற்குப்புறமாக நெற்பர 1,1/2. புறநீங்கலாக மிகுதிக்கு நெற்பர 46,1/2. இதில் வீதிக்கு எடுபட்ட நிலம் போக மிகுதியில் வடக்கரை வாசிக்கு நெற்பர 20. இதற்கு 1982-12-02-ம் திகதி நில அளவையாளர் சி. சிவரத்தினத்தால் 50-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நெற்பர. 19, குளி 04, 50 இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை விரகத்திப்பிள்ளைக்கும் மருபேருக்குமுரிய ஆதனம், வடக்கு தம்பிராசா பாலசுப்பிரமணியத்துக்கும் மருபேருக்குமுரிய ஆதனம், மேற்கு வீதி, தெற்கு ஆறுமுகம் பெருமையிருக்குரிய ஆதனம் இடங்களில் முழுவதும்.

3. ஷெ வரணி வடக்கிறை. சந்தவியாலைவயல் நெற்பர 30. முப்பது எல்லை கிழக்கு திரும்பரநடராசா அம்பலவாணசுவரமிகோயில் ஆதனம், வடக்கு முருகர் சுவாமிநாதனுக்கும் மனைவருக்கும் கந்தப்பர் சிதம்பரப்பிள்ளைக்கும் உடையவாதனம், மேற்கு நடைவரம்பு, தெற்கு மருதையினார் கந்தையாவுக்கும் மருபேருக்குமுடையவாதனம். இடங்களும்.

4. ஷெ எழுதுமட்டுவாள் கோயிற்பற்று மிருசுவில் இறை 'கல்வாய்க்கால்' நிபர. 3. கந்தில் தோட்டம் நிபர. 8. கூடிய நிபர. 11. இதற்கு 1983-07-05ம் திகதி நில அளவையாளர் எஸ். கிருஷ்ணசாமியால் 889ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி நிபர. 07. குளி 07. இதற்கு ... ஒழுங்கை, வடக்கு கிருஷ்ணசாமி பெண் ... ஆதனம், மேற்கு நமசிவாயம் பெண் ... ஆதனமும், கந்தையா சுப்பிரமணியத்து... வரிக்கும் உரிய ஆதனமும் ஒழுங்கையும்...

5 ஷெ வடமராட்சிப்பகுதி கல்... துன்னாலை வீரசுந்தரமுதலி குறிச்சியின்... பாடு நிபர. 51 இதில் நிபர. 5. இ... நில அளவையாளர் க. கணபதிப்பிள்ளை... கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்... ளது. இதற்கு எல்லை கிழக்கு முருகே... ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்... பசுபதீஸ்வரன் கோயிலுக்குரிய கா... இடங்கள் முழுவதும்.

6. ஷெ யிறை காரைக்கூட... இலைகளில் நிபர 2,3/4. இத... சதாசிவத்துக்கும் மருபேருக்கு... புலோலி பசுபதீஸ்வரன் கோயி... பாடு எனும் ஆதனம், மேற்கு... தீஸ்வரன் கோவிலுக்குரிய கிள... கள் முழுவதும்.

7. ஷெ யிறை கிணாவ... இதற்கு எல்லை கிழக்கும் தெ... பிக்குரிய ஆதனம், வடக்கு பு... லுக்குரிய காரைக்கூடல் எ... இடங்கள் முழுவதும்.

பு...

1984 தை மாதம் 16-ம் திகதி...

# ரூ. 40 லட்சம் கடத்தல்!

(கொழும்பு)

சுங்கப்பகுதியினர் நேற்று நடத்திய 'வேட்டை'யில் சுமார் நாற்பது லட்சம் ரூபா பெறுமதிமிக்க கடத்தல் பொருள்கள் சிக்கின!

இரகசிய தகவலைத்தொடர்ந்து சுங்கப்பகுதி உயர் அதிகாரிகள், கொட்டாஞ்சேனையிலும், புறக்கோட்டையிலும் நடத்திய திடீர்வேட்டையில்; ரூபா 38,60,608 பெறுமதி மிக்க தங்க, வெள்ளிப்பாளங்கள் உட்பட வெளிநாட்டு பிரயாணச் சோடிகளும் சிக்கிக்கொண்டன.

இதுசம்பந்தமாக இருவர் கைதுசெய்யப்படுள்ளனர்

## மார்ச் 15-ம் திகதியுடன் இது' நிறுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணத்தில் கரையோரப் பகுதிகளைத் தவிர்ந்த மற்றப் பகுதிகளில் வாளிமலகூடங்கள் சுத்திசெய்யப்படுவது மார்ச் மாதம் 15ம் திகதியுடன் நிறுத்தப்படும். சுகாதாரப்பகுதியினர் இதனை சகலருக்கு அறிவிக்கவேண்டும்''

யாழ். மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த சபை உத்தியோகத்தர் கூட்டத்தில் ஆணையாளர் திரு சீ வீ கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஆணையாளர் திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது: ''கொழும்புத்துறையில் இதுவரை காலமும் மலம் அாக்கப்பட்டுவந்தது இதனை அப்பகுதியிலுள்ள மணிப்புரி வாசிகள் ஆட்சேபித்துள்ளனர். பெப்ரவரி 3ம் திகதிக்குப் பின்னர் அங்கு மலம் புதைக்கமுடியாது ஆதலால், இப் பிரச்னையை சுகாதாரப் பகுதியினர், மக்களுக்கு எடுத்துக் கூறி உடனடியாக வாளி மலகூடங்களை, நீரமைப்பு மலகூடங்களாக மாற்றுமாறு கோரவேண்டும்.

' மார்ச் 15ம் திகதிக்குப் பின்னர் இச் சேவை நிச்சயம் நடைபெறாது ஆதலால், வாளிமலகூடம் உள்ள வீட்டு உரிமையாளர்கள், இதனை மாற்ற உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' (க)

## பருத்தித்துறை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி

(புலோலி)

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் திரு. ஜயந்த கமகே பொறுப்பேற்றுள்ளார். இவர்முன்னர் ரங்கல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய இன்ஸ்பெக்டர் திரு. ஒபயசேகரா திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து இதுவரை பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாக திரு கே. மகேந்திரன் கடமையாற்றினார்.

## மாணவர் வரவு குறைந்துள்ளது

(கோண்டாவில்)

யாழ். நகரில் பஸ் போக்குவரத்து மாலை 6-30 மணியுடன் நிறுத்தப்படுவதால் மாலைநேர யாழ். பல்தொழில் நுட்ப மாணவர்கள்வரவு குறைந்துள்ளது.

## சம்பளப் பணம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையில் நடந்த சம்பளப் பணம் ஒரு லட்சத்து 17 ஆயிரம் ரூபா கொள்ளை தொடர்பாக இதுவரை சந்தேகநபர்கள் கைது செய்யப்படவில்லை

கடந்த வெள்ளிக்கிழமை துப்பாக்கியுடன் சென்ற 6 இளைஞர்கள் சம்பளப்பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு சபைக்குச் சொந்தமான ஜீப்பில் தப்பிச்சென்றனர்.

ஜீப் பின்னர், குளப்பிட்டிச் சந்தியில் அனாதரவாக விடப்பட்டிருந்தது. அங்கிருந்து அவர்கள் கார் [illegible] ன்றைக் கட [illegible] ாகக் கூறப் [illegible] வம்பற்றி [illegible] ய்யப்பட் [illegible] (க)

## தமிழ் மாணவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு ஒருசிலநாட்களுக்குள் கூட இருப்பதால் இவ்வறிக்கை உடனடியாகத் தயாரிக்கப்பட உள்ளது'' என்று மாணவர் ஒன்றியத் தலைவர்கள் திரு த. ஜெயாபரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## உபவேந்தர் கருத்து

''யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கக்கூடியளவு பாதிக்கப்பட்ட தமிழ்பல்கலைக்கழக மாணவரை விரைவில் அனுமதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனை நேற்று சந்தித்த யாழ் பிரஜைகள்குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் வேண்டுகோளை விடுத்தார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் அனுமதி பற்றி இவர்கள் ஆலோசனை நடத்தினர். பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்காக இருப்பதாக உபவேந்தர் தெரிவித்தார்.

## நான் ஹிட்லர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி

சர்வகட்சி மாநாட்டின் முடிவுகள், மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## சர்வகட்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு நிலைபற்றி தெரியவில்லை. ஆனால் மாநாடு தொடர்ந்து நடைபெறும் என்று மட்டுமே தகவல் கிடைத்திருக்கிறது'' என்றுப் அவர் கூறினார். (கு

## அறிவித்தல்

### [illegible]த்தினம் இராசையா

[illegible] றப்பிடமாகக் கொண்டவரும் [illegible] நிலைய அதிபர் இராசையா [illegible] யும் திருமதி வி. புனிதவதி, [illegible] திரேலியா), இவர்தம் [illegible] கு அனுசூயா (ஆசிரியை [illegible] ளவப்) ஆகியோரின் தாயா [illegible] ரட்ணம், திருமதி வி. [illegible] திருமதி சி நந்தினி [illegible] ன் (புலைப்பிலைக் கட்டுத்தா [illegible] ரின் மாமியாரும் ஆவார். [illegible] 23-1-84 அன்று சகுப்பி [illegible] விர்க்கமுடியாத காரணத் [illegible] முடியாமைக்கு வருந்துகி 506

## இளம் பெண் தற்கொலை

(கரவெட்டி)

தந்தை உறுதியளித்தபடி சீதனத்தை கொடுக்காததனால் மனமுடைந்த இளம்பெண் திருமணம் முடித்து நாற்பது நாட்களில் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

கெருடாவிலைச் சேர்ந்த 19வயது பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்தவராவார்.

இவரின் மரணம் தொடர்பாக மரணவிசாரணையை உடுப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வி. நடராசா நடத்தினார்.

உறவினர்கள் சாட்சியமளித்தனர் சாட்சிகளை வல்வை பொலிஸ் கான்ஸ்டபிள் ஆ. சிவரத்தினம் ஆஜர் செய்தார் விசாரணைமுடிவில் தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (சூ)

## யாழ். நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரயத்தை விரும்பும் மனநோயாளரல்ல. எமது இனத்தின் விடுதலையை முன்னெடுத்துச் செல்லும் உண்மையான போராளிகள்'' என்று கருத்துப்பட சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது.

சுவரொட்டியின் கீழ்ப்பகுதியில் தங்கத்துரை தமிழீழ விடுதலைஇயக்கம்என்றும் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது அதன் கீழே 'ரெலோ' என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

இச்சுவரொட்டி காணப்பட்ட சுவருக்கு எதிர்ப்பக்கத்தில் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் மிகப்பெரிய தமிழ் சுவரொட்டி ஒன்றும் காணப்படுகிறது.

மற்றொரு சுவரொட்டியில் ''ஆயுதத்திற்கு அடிபணிய மாட்டோம். ஆயுதமாகி விட்டோம்'' என்ற சுவரொட்டியும் காணப்படுகிறது. (க

## அளவெட்டி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்திலுள்ள எட்டுநகைக் கடைகளிலிருந்து கைப்பற்றியுள்ளனர்.

மாவிட்டபுரம் அரசடி வீதியைச் சேர்ந்த எஸ். அருளம்மா எனும் பெண்ணை பொலிசார் விசாரணை செய்ததைத் தொடர்ந்தே நகைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிசார் தெரிவித்தனர்.

காங்கேசன் துறைப்பொலிஸ் நிலையகுற்றப்புலனாய்வுத்துறை பொறுப்பதிகாரி எஸ் ஜெயபாலன். சார்ஜன்டுகள் எஸ். ஜோர்ஜ், வி தியாகராஜா, கான்ஸ்டபிள் செபஸ்தியான் ஆகியோர் இக்கொள்ளைபோன நகைகளை மீட்டனர்.

விரைவில் மிகுதி நகைகளையும் கைப்பற்றி. சந்தேகநபர்களையும் கைதுசெய்துவிடலாம் என்று இப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (கி)

## 8 பரப்புக்காணியை சுவீகரிக்க கோரிக்கை

(கரவெட்டி)

''கரவெட்டி முடக்காட்டில் உள்ள கரவெட்டி திரு இருதயக்கல்லூரிக்குச் சொந்தமான சுமார் எட்டுப்பரப்புக் காணியை இங்கு அத்துமீறிக் குடியேறியவர்களிடமிருந்து அரசு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று கரவெட்டி திரு.இருதயக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானித்துள்ளது

கல்லூரிஅதிபர்திரு.தோமஸ் ஈப்பன் தலைமையில் நடைபெற்ற பிரஸ்தாப சங்கக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட சட்டத்தரணி திரு. ஈ. டபிள்யூ. தேவராஜா ''இப்பாடசாலைக்குச் சொந்தமான பல பரப்புக்களைக்கொண்ட நிலப் பகுதி முடக்காட்டில் உள்ளது. அங்கு தனிப்பட்டவர்கள் அத்துமீறிக் குடியேறி கட்டடங்களையும் அமைத்துவருகின்றனர்.

பாடசாலை விஸ்தரிப்பிற்கும் விளையாட்டுமைதானத்திற்கும் இடமில்லாமல் இக் கல்லூரி பலவருடகாலமாகத் தவிக்கும் இந்நேரத்தில் அரசு இக்காணிகளைச் சுவீகரித்துத்தர துரித நடவடிக்கைஎடுக்கவேண்டும்'' என்று தீர்மானம் ஒன்றை சமர்ப்பித்தார்.

இது சபையினரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

## நீதிமன்றம்வராத எதிரிக்கு ஏழு வருட கடுழிய சிறை!

(நல்லூர்)

வழக்கு விசாரணையின் போதுசமூகம் அளிக்காத, பணமோசடி கொள்ளை வழக்கு எதிரிக்கு, விசாரணையின் முடிவில் யாழ்ப்பாண மேல்நீதிமன்றம் ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தது

இவ்வழக்கில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ரூ 13 672 பணத்தை கூட்டுத்தாபன உத்தியோகத்தர் க. சபாரத்தினம் என்பவரின் உடைமையிலிருந்து கொள்ளையடித்ததாக இராசையா ரவீந்திரன் என்பவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

அரச சட்டத்தரணி ஐயாத்துரைஞானதாசன் சாட்சியளை நெறிப்படுத்தினர் கூட்டுத்தாபன ஊழியர் கனகசபை முதலி நடராசா, கா. சரோஜா, இரத்தினம் தவராசா. பொலிஸ் இன்ஸ்பெக்டர் செனிவிரட்ண நீதிமன்ற முதலியார் சுப்பையா இராமலிங்கம் ஆகியோரும் சாட்சியம் அளித்தனர்.

விசாரணையில் சமூகமளிக்காத எதிரிக்கு எதிராக பகிரங்க பிடிவிறாந்து பிறப்பித்த யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி திரு ஐ ஜே. ஆசீர்வாதம் எதிரியின் கைவசமிருந்து பெறப்பட்ட 10 151 ரூபாவை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்குமாறு கட்டளை பிறப்பித்தார்.

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை கனகசபாபதி

மல்லாகம்

மல்லாகம் சட்டத்தரணி சபாபதிப்பிள்ளை கனகசபாபதி காலமானார். இவர் காலஞ்சென்ற பிரசித்த நொத்தாரிஸ் சரவணமுத்து சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், பொன்னுப்பிள்ளையின் அன்புக் கணவரும், அகிலேஸ்வரி, சரவணபவான், சோமசுந்தரம், திவாகரராசா, கோபாலகிருஷ்ணன் (அவுஸ்திரேலியா), சண்முகசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் (31-1-84) செவ்வாய்க்கிழமை நண்பகல் பதியகம் மல்லாகத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 522

## மரண அறிவித்தல்

### உடுவில் முருகேசர் ஜெகநாதன்

உடுவிலைச் சேர்ந்த முன்னாள் ஐக்கிய விளைபொருள் உற்பத்திச்சங்க முகாமையாளர் முருகேசர்ஜெகநாதன் காலமானார் இவர் இளைப்பாறிய நல்லம்மா ஆசிரியை (கிச்சி) யின் அன்புக்கணவரும், விக்கினேஸ்வரன் (K G. Industries), பகீரதன் (நீர்ப்பாசன இலாகா), ரமணி, ரஜனி (இராமநாதன் - நுண்கலைப்பிரிவு) ஆகியோரின் தகப்பனும், பரமேஸ்வரி, செகராசசேகரம் (தந்தி தொலைத் தொடர்பு) ஆகியோரின் மாமனாரும், பிரதீபனின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று 31ம் திகதி மாலை உடுவிலில் நடைபெறும். 521

[illegible] லிமிடெட் [illegible] 1984-
1-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, [illegible]
[illegible] P. O. Box 49, Telephones: 22389 — 24126.